[1978 ஆகஸ்ட் 31

(ஆ) பேரவை அலுவல்கள்

1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்ட மன்றப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி யன்று முன்மொழிய வேண்டும். திருத்தங்கள் 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ஆம் தேதி அன்று பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கவேண்டும்.

(இ) நடைமுறை விதிக் குழு உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 229(1)-வது விதியின்கீழ் 1978–79 ஆம் ஆண்டுக்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் (Rules Committee) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
5. திரு துரை கோவிந்தராசன்
6. திரு. மு. அம்பிகாபதி
7. திரு மெ. ஆண்டி அம்பலம்
8. திரு. கோ. இளங்கோவன்
9. திரு. ரா. உமாநாத்
10. திரு. செ. கிருஷ்ணன்
11. புலவர் கா. கோவிந்தன்
12. திரு. ஆ. நடராசன்
13. திரு பி. எச். பாண்டியன்
14. டாக்டர் ஏ. பொன்னுச்சாமி
15. திரு. ஆர். வெள்ளைச்சாமி
16. திரு. ர. ஜெபமணி.

பேரவையின் 229(1)-வது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவர்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS